VAALIPAN MINISTRIES SRI LANKA

# வாலிபன்
# VAALIPAN

இதழ் - 60 / வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை / கார்த்திகை- 2012



PR. MOSES RAJASEKAR

1967 - 2012

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்".

(II தீமோத்தேயு 4:7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிபன்
# VAALIPAN

கிறிஸ்துவுக்குள் அன்பான 'வாலிபன்" வாசகர்களுக்கு,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

வாலிபன் ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டு இத்துடன் அறுபது மாதங்கள் (5 வருடங்கள்) பூர்த்தியடைகின்றது என்பதை தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மே மாத இதழ்களை வெளியிட கிருபையளித்த ஆண்டவரை மனதாரத் துதிக்கின்றேன். இவ்வூழியத்தை செய்யவென நாங்கள் உணருகின்றோம். எல்லாத் துதியும் கனமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கே! அல்லேலூயா!

இவ்வூழியம் இவ்வளவாய் வளரவும் பெருகவும் ஒத்துழைப்பு வழங்கிய உங்களுக்கு எமது ஜெபத்துடனான நன்றிகள் உரித்தாகட்டும். கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசிர்வதிப்பராக!

மேலும், நாம் அனைவரும் இணைந்து இவ்வூழியத்தை நடாத்த கிருபையளித்த ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் முகமாக மார்கழி மாதம் 9ம் திகதி கோட்டைமுனை மெதடிஸ்த திருச்ச பையில் காலை 7.30 மணிக்கு கூடுவோமாக! எவ்வித பாகுபாடு மின்றி ஒரே ஆண்டவரை நன்றிகூற குடும்ப சகிதமாய் அன் போடு அழைக்கின்றோம்.

*கிறிஸ்துவின் பணியில்*
*ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

## கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்........ 30

சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்

**தே**வனுடைய மனுஷனாகிய கனம் ஜோன் வெஸ்லி ஐயர் அவர்கள் கிறிஸ்துவால் அருளப்படும் மட்டற்றதும், உலகினால் விபரிக்கவே முடியாததுமான வல்லமையினால் நிரப்பப்பட்டவராக பிரசங்கம்செய்த பொழுது, போர்க்களத்தில்ஒரு சேனையானது முறியடிக்கப்பட்டது போன்று பிசாசின் சக்திகள் முறியடிக்கப்பட்டு ஓடின. அவர் பிரசங்கம் செய்தபொழுது ஆண்களுக்குள்ளும், பெண்களுக்கும் அவர் தம் இருதயங்களில் காணப்பட்ட "எதிர்ப்புணர்வு" எனும் அடித்தளம் சுக்குநூறாக சிதைக்கப்பட்டுப்போனது. பாவ உணர்வு அவர்கள் மேல் வந்தபொழுது, அதைத் தாங்க முடியாதவர்களாய் அவர்கள் தங்களுடைய இருப்பிடங்களிலிருந்து எல்லாம் விழ ஆரம்பித்தார்கள். ஜோன் வெஸ்லி அவர்கள் மேல் வந்தபொழுது, அதைத் தாங்க முடியாதவர்களாய் அவர்கள் தங்களுடைய இருப்பிடங்களிலிருந்து எல்லாம் விழ ஆரம்பித்தார்கள். ஜோன் வெஸ்லி அவர்கள் பிரசங்கித்து, பிற்பாடு ஜெபித்த சகல இடங்களிலும் இச்செயற்பாடுகள் மிக அதிகமாக நடந்தன.

இத்தொடரை இடைவிடாது மிகக் கவனமுடன் வாசித்து வருகின்ற கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த நண்பரொருவர், சுரேந்திரனாகிய அடியானிடம் வினாவொன்றைத் தொடுத்தார். "சகோதரரே! ஜோன் வெஸ்லி அவர்களின் வாழ்க்கைச் சரிதம் தொடர்புபட்ட தொடரானது சற்றுத் திசைமாறி, இங்கிலாந்து நாட்டு மக்களுடையள சராசரித் தொடர்பு வாழ்க்கை முறைகளையும், பொருளாதாரச் சிக்கல் முறைகளை நோக்கிய ஒரு பயணத்தை நோக்கிச் செல்வது போன்று புலப்படுகிறதே?" என வினாத் தொடுத்தார். உண்மையில், பாவங்களின் உறைவிடங்களாக, இன்னும் ஆழமாக விளக்கினால் பாவிகளாக அல்ல, அவர்களே பாவங்களாக மாறிப்போன காலகட்டங்களுக்கு எப்படியாகத் தங்களை ஆட்படுத்தி, அடிமைப்பட்டு, மீளமுடியாத ஏதிலிகளாகத் தவித்த சூழ்நிலைகளின் பெறுமதியை வாசகர்களுக்கு புரியவைத்திட வேண்டுமானால், இங்கிலாந்தின் கீழான அக்கால சூழ்நிலை விபரிக்கப்படல் வேண்டும். எப்படியாகப்பட்ட பயங்கர சூழ்நிலையிலே, தன்னுடைய அருள்நாதராகிய கிறிஸ்துவின் பணியினை சிரமேற் கொண்டவராக வெஸ்லி ஐயர் அவர்கள் இதய பாரத்துடன் செயற்பட்டார் என்ற பிரதிபலிப்பே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவங்களான இங்கிலாந்து நாட்டு மக்கள் வசனங்களைக் கேட்டவு டனே, தேவப் பிரசன்னத்தைத் தாங்க முடியாதவர்களாக அடிபட்டு, தூக்கி யெறியப்பட்டவர்களாக விழுந்தனர் எனச் சரித்திரம் கூறுகின்றது. சிதைக் கவே முடியாத இந்த மனவுணர்வுடன் அவர் தேசம் முழுவதும் சுற்றித் திரிந்தார். இவ்வாறு அவர் தேசம் முழுவதும் சுற்றித் திரிந்த பொழுது அவரால் செய்யப்பட்ட பிரசங்கங்களின் எண்ணிக்கை, இறை ஆய்வாளர் களின் கருத்துப்படி கிட்டத்தட்ட நாற்பதினாயிரம் (40,000) ஆகும். ஒவ் வொருநாளும் அதிகாலை ஐந்து மணிக்கு அந்த நாளுக்குரிய மகுட பிரசங்க வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு அருளுரையாற்றியுள்ளார். இக்காரியங்களிலே மிகவும் குறிப்பிட வேண்டியதும், ஆச்சரியமிக்கதுமான குறிப்புரையை வாசகர்களுடன் இவ்விடம் பகிர்ந்துகொள்ள விரும்புகின் றேன். அதுதான் "குளிர்"

இந்திய சேத்தின் தென்கீழ்த் திசையில் "கர்த்தரின் எழுத்தாணி" என வர்ணிக்கப்படும் சகோ.சாம் ஜெபதுரை அவர்களால் சுமார் ஐந்நூறு சிறு புத்தகங்கள் இதுவரை எழுதி வெளியிடப்பட்டுள்ளன. இவைகளில் ஒரு நூலில் இவர் ஆச்சரியப்படும் விடயம் இந்தக்குளிர். ஏனெனில் ஊழிய அனல் வெஸ்லி அவர்கள் மீது அளவில்லாமல் கொட்டப்பட்ட, ஆரம்பக் காலம் இங்கிலாந்தில் சகிக்கவே முடியாத குளிர்காலமாக இருந்துள்ளது. இப்படியான காலங்களில் மக்கள் இழுத்துப் போர்த்திக்கொண்டு உறங்கு வதுதான் வழக்கம். ஆனால் தேவ அடியான் 'சாம் ஜெபதுரை' அவர்கள் விபரித்து எழுதும்போது "பயங்கரமான இந்தக் குளிர் மக்களது முதுகுத் தண்டையே சிலிர்த்துப் போகும் வண்ணமாக தனது செயற்பாட்டைக் காண்பித்தபோதும், எப்படியாக மக்கள் கூட்டம் அதிகாலை ஐந்து மணிக் கெல்லாம் கனம் ஜோன் வெஸ்லி அவர்களின் வீட்டுக்கு முன்பாக திரளா கக் கூடி, வசனம் கேட்க நின்றார்கள் என்பது எம்மை மலைக்க வைக்கும் விடயமாகும்" என எழுதுகிறார்.

உண்மையில் வார்த்தைகளினால் விபரிக்கவே முடியாத அளவுக்கு செயலாற்றும் பரிசுத்த ஆவியானவரின் அன்புமிகு வழிநடத்தலின் செயற் பாடே இதுவாகும். மனுஷ அறிவினால், வெறும் வார்த்தை ஜாலங்களினால் இத்தொடரை வாசிக்கின்ற அன்பு வாசகர்களே, இதனை விபரிக்கவே முடியாது. ஆயின் எப்படி முடியும்? காத்திருந்து அனுபவித்துப் பெற வேண் டும். வெஸ்லி அவர்களைப் போன்று இடைவிடாது கேட்டுப் போராட வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேக ஊற்றுதல் பற்றிய பல்வேறு பட்ட வாதப் பிரதிவாதங்கள் இன்று எமது மெதடிஸ்த திருச்சபைகளில் மட்டுமன்றி, சகல விடுதலை இறையியல் நோக்குக் கொண்ட சகல திருச் சபைகளிலும் காணப்படுகின்றது. கோட்டைமுனை சேகரத்திலிருந்து உலகின் கோடியெல்லை வரைக்கும் இச்சர்ச்சை சரமாரியாக உண்டு. இவை பற்றிய ஆய்வு எமது நோக்கமல்ல. ஆனால் பரிசுத்த ஆவியானவ ரால் நிரப்பப்பட்ட ஒரு மனிதனை அல்லது மனுஷியை நாம் இலகு வாகக் கண்டுபிடிக்கலாம். எப்படி???

**(வெஸ்லி மீண்டும் வருவார்...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரா :.பிளவர் ஆடம்ஸ்



- **பெயர்** : சாரா .:.பிளவர் ஆடம்ஸ்( Sarah Flower Adams)
- **எழுதிய பாடல்** : உம்மண்டை கர்த்தரே
- **பிறந்த ஆண்டு** : 1805.2.22
- **இறப்பு** : 1848.8.14
- **மெதடிஸ்த பாடல் இல** :390

**சாரா** .:.பிளவர் ஆடம்ஸ் அம்மையார் ஒருநாள் இரவு பெத்தேலில் யாக்கோபு கண்ட கனவைக் கண்டார். எந்தக் கஷ்டமான நிலையிலும் கடவுள் தமது அடியார்களுக்கு அருள் செய்வார் என்னும் உறுதியான நம்பிக்கை அவர்களுக்கு உண்டாயிற்று. விழத்தெழும்பியதும் இக்கனவின் சில வரிகள் ஒரு பாடலாக மனதில் உண்டாயின. தன் மனதில் உருவான **'உம்மண்டை கர்த்தரே'** என்னும் பாடலை எழுதி தன் சகோதரி **எலைசாவின்** உதவியால் ஒரு இராகத்தையும் அமைத்துக் கொடுத்தார். பின்னர் இப்பாடலின் சிறப்பை உணர்ந்த சங்கீத நிபுணரான **லல்வல் மேசன்** பண்டிதர் இப்போது நாம் பாடி வரும் பெத்தானி என்னும் அழகிய இராகத்தை அமைத்தார்.

உலகத்திலேயே மிகப் பெரிய கப்பல் என அக்காலத்தில் கருதப்பட்ட டைட்டானிக் என்னும் பிரிட்டிஷ் கப்பல் 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு 2000த்துக்கும் அதிகமான பேர்களோடு புறப்பட்டது. ஏப்ரல் 14 ஆம் தேதி நள்ளிரவில் மிதந்து வந்த இக் கப்பல் ஒரு பனிமலையில் மோதியது. ஆனால். மூன்றிலொரு பகுதிக்குத்தான் உயிர் மீட்சிப் படகுகள் (life boats) இருந்தன. ஆயினும் கப்பலின் வாத்தியக் குழுவினர் "உம்மண்டை கர்த்தரே.." என்னும் பாடலின் இராகத்தை தொனிக்க, பிரயாணிகள் யாவரும் இப்பாடலை உரத்த சத்தமாய்ப் பாடியவண்ணம் சுமார் 700 பேர் மட்டுமே உயிர் தப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். ஏனையோர் கடலுடன் சங்கமமாயினர்.

அமெரிக்க ஜக்கிய நாடுகளின் ஜனாதிபதியாக இருந்த வில்லியம் மாக்கின்லே என்பவர் இப்பாடலைப் பெரிதும் பாராட்டி தாம் மரித்த பின் தமது அடக்க ஆராதனையில் இப்பாடல் பாடப்பட வேண்டுமென விரும்பினார்.. சாரா ஃபிளவர் ஆடம்ஸ் அம்மையார் நூற்றுக்கதிகமான பாடல்கள் எழுயுதியுள்ளார். இப்பாடல்களுக்கு அவருடைய சகோதரி எசைாவின் இராகங்கள் அமைத்து வந்தார். தனது 43 வயதில் அம்மையார் காலமானார்...




*பாடல் எழுதியவர் :*
***சாரா ஃபிளவர் ஆடம்ஸ்***



***சாரா ஃபிளவர் ஆடம்ஸ்* சகோதரி எலைசாவின்**



***இசை அமைத்தவர்:* சங்கீத நிபுணரான லல்வல் மேசன்**



**டைட்டானிக் என்னும் பிரிட்டிஷ் கப்பல்**



**அமெரிக்க ஜக்கிய நாடுகளின் ஜனாதிபதியாக வில்லியம் மாக்கின்லே**

**ஏஸ்பரன் P. தர்ஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாளும் மனுமகன்

**திருவெளிப்பாடு 1:12,13**

**"என்னோடு பேசியவர் யார் என்று பார்க்கத் திரும்பினேன். அப்பொழுது ஏழு பொன் விளக்குத் தண்டுகளைக் கண்டேன். அவற்றின் நடுவே மானிட மகனைப் போன்ற ஒருவரைப் பார்த்தேன். அவர் நீண்ட அங்கியும் மார்பில் பொன்பட்டையும் அணிந்திருந்தார்.**

**யோ**வான் கடவுளைக் குறித்து கண்ட காட்சிகளில் இது முக்கிய மானதோர் காட்சியாகும். இக் காட்சிகள் கூடாரத் திருவிழாவின் காட்சிக்கும், எருசலேம் ஆலயக் காட்சிக்கும், சகரியாவின் காட்சிக்கும் ஒத்ததாகக் காணப்படுகின்றது. இவற்றின் மத்தியில் மனுமகன் அனைத்திலும் அதிகாரம் செலுத்துபவராகக் காணப் படுகின்றார். ஆசரிப்புக் கூடாரத்திற்கு ஒத்த அமைப்புடையதாக பொன் படலம் காணப்படுகின்றது. (யாத்திராகமம் / விடுதலைப்பயணம் 25:31-37). மேலும் சாலமோனால் கட்டப்பட்ட எருசலேம் ஆலயத்தின் வலது, இடது பக்கங்களில் காணப்படுகின்ற ஒளிச் சுடர்களுக்கு ஈடான காட்சியை இங்கு யோவான் காண்கின்றார். (1 அரசர் / இராஜாக்கள் 7:49). மேலும் சகரியாவின் காட்சிக்கு ஒத்த காட்சியாக இது காணப்படுகின்றது. (சகரியா / செக்கரியா 4:2).

யோவான் கண்ட காட்சிகளில் மனித உருவத்திற்கு ஒத்ததான ஓர் காட்சியைக் காண்கின்றார். இவர் மானிட மகன் என அடையாளப்படுத்தப்படுகின்றார். (தானியேல் 7:13,14). நற்செய்திகளில் காணப்படும் மானிட மகனின் பண்புகளைவிட வேறுபட்டவராகக் காணப்படுகின்றார். அதாவது தொடர்ந்து துன்பங்களை அனுபவிக்கும் மக்களுடன் இணைந்து துயரப்படுபவராக மாத்திரமன்றி ஆட்சியாளர்கள் மீது செல்வாக்குச் செலுத்தி அதிகாரத்தைத் தம் மக்களிடம் கையளிக்கும் மேசியாவாகவும் செயல்படுகின்றார்.

மானிட மகனின் ஆடை ஓர் ஆட்சியாளருக்கான ஆடைக்கு ஒத்த ஆடையாகக் காணப்பட்டது. சிலுவையில் ஆடையற்று மக்களுக்காக அடிக்கப்பட்ட ஆண்டவர் இங்கு ஆட்சியாளராக அரியணையில் வீற்றிருந்த காட்சி தரிசனத்தைக் கண்ட யோவானையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

முகம் முகமாய் வரலாற்றில் வாழ்ந்த இயேசுவை அனுபவித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் இப்பொழுது குரலொலி வாயிலாக இயேசுவின் சத்தத்தைக் கேட்கின்றார். இவைகள் யோவானுக்கு புதுமையாகவே காணப்பட்டன.

யோவான் கண்ட காட்சி பழைய ஏற்பாட்டில் காணப்பட்ட காட்சிகளுடன் நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகின்றன. இதன் மூலம் பழைய ஏற்பாட்டின் நிறைவும் முழுமையுமாக புதிய ஏற்பாடு காணப்படுகின்றது என்ற முடிவிற்கு வரலாம். மேலும் கடவுள் வெற்றிடத்தின் ஊடாகச் செயற்படாமல் மக்களை தனது பணிக்காகப் பயன்படுத்துகின்றார் என்பதையும் மக்கள் மீது அவருக்குள்ள கரிசனையையும் இக்காட்சி நிரூபிக்கின்றது.

அரசியல் காரணங்களாலும் மதக் காரணங்களாலும் துன்பப்படுகின்ற மக்களுக்கு மனுமகனின் தரிசனம் புதிய நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் எதிர்காலத்தில் அவர்கள் அடையப்போகும் மாட்சிமையையும் வெளிப்படுத்தியது. இதன் மூலம் கடவுள் காட்சிகளின் ஊடாக நம்பிக்கையை அருளுகின்றார் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.


**அருட்பணி அருளம்பலம் ஸ்ரீபன்**
இலங்கை இறையியல் கல்லூரி.
பிலிமத்தலாவை.


# கவிதைப்போட்டி - 43

கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

**"கர்த்தாவே உம்முடைய கண்கள் சத்தியத்தை அல்லவோ...." (எரேமியா 5 : 3)**

இறுதித் திகதி 05.12.2012

## கவிதைப் போட்டி - 42ல் வெற்றிபெற்ற சிறந்த கவிதை

**"கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும்..." (சங்கீதம் 103 : 17)**

கற்களும், முட்களும் நிறைந்த இவ்வுலகிலே
கவலையற்றும் கர்த்தர் பயமற்றும் வாழ்கிறாயோ....??
கல்வாரி நாயகன் இயேசு உன்னை கரம்நீட்டி அழைக்கிறார்
கண்டிடுவாய் கர்த்தர் கிருபையதையே...

*Gershy*
Batticaloa.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி – 59

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ட | 2 | | ■ | 3 | ■ | 4 | |
| ■ | | ■ | 5 | | | | ■ |
| ■ | | ■ | | ■ | ■ | 6 | 7 |
| 8 | | | | 9 | ■ | ■ | |
| ■ | | ■ | ■ | | ■ | 10 | ■ |
| 11 | | | | ■ | 12 | | |
| ■ | | ■ | ■ | 13 | ■ | | ■ |
| 14 | | ■ | 15 | | | | ■ |




## இடமிருந்து வலம்

01. இரவின் 4ம் ஜாமத்திலே இயேசு இதன் மேல் நடந்தார் (குழம்பியுள்ளது).
04. நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப் படுவதினாலே இவர் நமக்கு பாராட்டின அன்பு எவ்வளவு பெரியதாயிருக்கிறது.
05. "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" என்று தேவன் இவனிடத்தில் சொன்னார் (திரும்பியுள்ளது).
06. ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுள் ஒன்று ((முதல் எழுத்தின்றி திரும்பியுள்ளது).
08. இது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்தி ருக்கும் (உதவி : யோவான்).
11. இதனைப் போல் சத்துரு வரும்போது ஆவியான வர் அவனுக்கு விரோதமாக கொடியேற்றுவார்.
12. கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து வேதப் பிரமாணத்தின்படி திட்டமாய் போதிக்கப்பட்டவன் (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன).
14. ".......... உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என பார்த்து நித்திய வழியில் என்னை நடத்தும்" என தாவீது கூறுகிறார் (இறுதி எழுத்து இல்லை).
15. இந்த தீவில்தான் பவுலின் கையை விரியன் பாம்பு கவ்வியது.

## மேலிருந்து கீழ்

02. பிரம்பும் இதுவும் ஞானத்தைக் கொடுக்கும் (இறுதி எழுத்து இல்லை), (உதவி: நீதிமொழிகள்).
03. இவன் கெர்சோமின் தகப்பன் (தலைகீழ்).
04. இதற்கு இடங்கொடாமல் இருங்கள் என வேதம் கூறுகிறது.
05. கர்த்தர் இஸ்ரவேலருக்கு புசிக்கக் கொடுத்த அப்பம் (குழம்பியுள்ளது).
07. நோவா இதனை உருவாக்க கொப்பேர் மரத்தைப் பயன்படுத் தினான்.
09. யாக்கோபினுடைய சொப்பனத் தில் பூமியிலே இது வைக்கப்பட் டிருந்தது (தலைகீழ்).
10. கபாலஸ்தலம் எனும் இடம் எபிரெய பாஷையில் இவ்வாறு கூறப்படும்.
13. யோபுவுக்கு உண்டான எல்லா வற்றையும் சுற்றி கர்த்தர் இது அடைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 58 இற்கான விடைகள்

### இடமிருந்து வலம்

02. பெண்யமீன்
05. த்பேகெ {(யோ)கெபேத்}
06. நேபுகாத்நேச்சார்
09. கேயாசி
10. வேளை
12. யோவேல்
13. சைட்சி (சிட்சை)

### மேலிருந்து கீழ்

01. தித்ர்நே (நேர்த்தி)
03. ன்தகிநேசி (சிநேகிதன்)
04. மீன்
07. காணியாட்சி
08. சாமுவேல்
11. கைசை (சைகை)
12. யோனா

குறுக்கெழுத்துப் போட்டி 58க்கான சரியான விடை அனுப்பியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி

**ராஜேந்திரன் ரதுனா**
சிமிர்னா ஆலயம்,
மட்டக்களப்பு.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 59ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 05.12.2012**

**அனுப்ப வேண்டிய முகவரி :**

ஆசிரியர்,
குறுக்கெழுத்துப்போட்டி - 59
"வாலிபன்",
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்
மட்டக்களப்பு.

## சிறுவர்களுக்கான

## வினா விடைப் போட்டி இலக்கம் - 51

1) கபாலஸ்தலம் என்று அர்த்தம் கொள்ளும் இடம் எது?

.................................................................

2) ஏலோயி என்பதன் அர்த்தம் என்ன?

.................................................................

3) இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ண பிலாத்துவிடம் கேட்டவன் யார்?

.................................................................

4) இயேசு உயிர்த்தெழுந்து முதலில் தரிசனமானது யாருக்கு?

.................................................................

5) மகதலேனா மரியாளிடமிருந்து இயேசு எத்தனை பிசாசுகளைத் துரத்தினார்?

.................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா விடைப் போட்டி**

**50 இற்கான விடைகள்**

1. சிரேனே ஊர் சீமோன்
2. அலெக்சாந்தர், ரூப்
3. பஸ்கா
4. சிவப்பு
5. பரபாஸ்



**வினா விடைப் போட்டி 50ல்**
**சரியான விடை எழுதி**
**பரிசுபெறும் அதிஷ்டசாலி**

**K.வானதி**
மெதடிஸ்த சிறுமியர் இல்லம்,
கோட்டைமுனை.

☞ இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.

☞ வினா விடைப்போட்டி **51** இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : **05.12.2012**

அனுப்ப வேண்டிய முகவரி :
**ஆசிரியர்,**
வினாவிடைப் போட்டி - 51
'வாலிபன்' -
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.



## போட்டி பற்றிய நிபந்தனைகள் :

- *16* வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

# வருகை



வர வேண்டுமே மன்னவா
வர வேண்டுமே
மணவாளியாக நான்
ஆயத்தமாகி விட்டேன்

ஆதவனோ ஆழத்தில்
இருளாகின்றான்
சந்திரனோ இரத்தக்
கண்ணீர் வடிக்கப்போகிறான்

என்னை எப்போது
அழைத்துச் செல்வீர் ஆண்டவரே?
ஏங்குகிறது என் இதயம்
மன்னவா உமக்காக!

பாழாய்ப்போன உலகினிலே - நான்
ஒரு பாத்திரமாய் வாழ்ந்து விட்டேன்
போதும் இவ் வாழ்க்கை!
அழைத்துச் செல்ல வாரும் என்
அன்பு நேசரே.... இயேசையா....

ரா.ரதுனா
சிமிர்னா ஆலயம்- மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு எப்போதும் எம்முடன் இருக்கிறாரா?



**தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவ பக்தி யுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்ற படியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும்.**

– 1 தீமோத்தேயு 2:8

பட்டணத்தில் வசிக்கும் பெண் ஒருத்தி தன் போதகரிடம் வந்து "நான் எப்படி ஆடையணிய வேண்டும்?" என்று கேட்டாள். அதற்கு அவர், "உன் சுடிதார் இவ்வளவு நீளம் இருக்க வேண்டும். உன் சட்டையின் கழுத்து இவ்வளவு குறைவாக இருக்க வேண்டுமென்று சொல்ல நான் ஒரு டெய்லர் இல்லை. நான் ஒரு ஊழியன். ஆகவே, நீ எப்படி ஆடையணிய வேண்டு மென்று கூறுகிறேன் என்றால் உன் வீட்டிற்கு அடுத்த தெருவில் இயேசு வாழ்ந்துகொண்டு இருக்கிறார் என வைத்துக்கொள். ஒருநாள் இயேசு உன்னை அழைத்து "என்னுடைய வீட்டிற்கு வா" என்று சொல்லுகிறார். "நாம் இருவரும் ஒரு இடத்திற்கு செல்ல வேண்டும்" என்று சொல்லுகிறார். அவருடன் செல்ல நீ எவ்வித ஆடையணிவாயோ அதுபோலவே ஒவ்வொரு நாளும் ஆடையணி" என்றார். அதைத்தொடர்ந்து அவர் கூறியதாவது,

"நீங்கள் எப்படிப்பட்ட ஆடையணிந்து இயேசுவைப் பார்க்க முடியுமோ அப்படிப்பட்ட ஆடை அணியுங்கள். இயேசுவோடு நடக்கும் போது இப்படிப் பட்ட ஆடையை அணியக்கூடாது என்று உங்கள் மனச்சாட்சி உறுத்தும் என்றால் அப்படிப்பட்டதை அணிய வேண்டாம். சில பெற்றோர்கள் பிள்ளை களுக்கு என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? "மகளே, நீ சபைக்குப் போகும் போது தகுதியான ஆடை அணிந்துகொள். வேலைக்குப் போகும் போது நீ விரும்பியபடி ஆடை அணி" என்கின்றனர். இதற்கு என்ன பொருள்? வேலைக் குப் போகும்போது இயேசு உன்னுடன் வருகிறாரா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் கவலையில்லை என்பதுதானே! "வேலைக்குப் போகும் போது இயேசு உன்னுடன் வரவேண்டாமா?" எனக் கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த டிவி நிகழ்ச்சியைப் பார்க்கலாமா? என எண்ணும்போது, அருகாமையிலே இயேசு உட்கார்ந்திருக்கிறார். என எண்ணிக்கொள்ளுங்கள். இயேசு உங்களோடு அமர்ந்து பார்க்கக்கூடியவற்றையே பாருங்கள். இயேசுவோடு சேர்ந்து எவ்வித நிகழ்ச்சியைப் பார்க்க முடியுமோ அதைப் பாருங்கள். உங்களுக்குத் தெரியுமா? **நம் வாழ்வின் அநேக காரியங்களை இயேசு இல்லாமலே தனியாகத்தான் செய்கிறோம்.**

சபையில் உள்ள ஒரு சகோதரர் உங்களைச் சந்திக்கும்படி உங்கள் வீட்டிற்கு வருவார் என்றால் அவருக்கு முன்பாக உங்கள் கணவரோடோ, மனைவியோடோ நீங்கள் சண்டை போடுவீர்களா? இல்லை, அவர் போன உடன் சண்டைபோட ஆரம்பித்துவிடுகிறோம். ஏன்? கர்த்தர் நம்மோடு கூட இருக்கிறார் என்கிற எண்ணம் இல்லாததினாலேயே!

என்னோடு கூட சேர்ந்து இயேசு இந்தப் புத்தகத்தை வாசிக்காவிட்டால் என்னால் இந்தப் புத்தகத்தை வாசிக்க முடியாது. இயேசு உங்களோடு வாசிக்க முடியுமென்றால் அது அசுத்தமான புத்தகமாக இருக்கமுடியாது. உங்கள் ஆத்துமாவிற்கு நன்மை பயக்கக் கூடியதாகவே இருக்கும். என்னோடு கூட சேர்ந்து இயேசுவும் இந்த கணனியில் வரும் காரியங்களைப் பார்க்க முடியாவிட்டால் அதை நான் பார்க்கமாட்டேன் என மனதில் உறுதி எடுக்க வேண்டும். நான் வேலை செய்யும் இடத்திலே இயேசு என்னோடு இருக்கிறார் என்ற எண்ணத்தோடு செயல்படுவோமானால் நாம் பேசுகிற தேவையற்ற வார்த்தைகளும், நம்மை யாரும் பார்க்கவில்லை என்ற எண்ணத்தோடு செய்கிற காரியங்களும் இல்லாமல் போகும்.

பிரியமானவர்களே! நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் இயேசு நம்மோடு கூட இருக்கிறார் என்கின்ற எண்ணத்தோடு செய்தால், நிச்சயமாக நாம் தவறான காரியங்கள் செய்ய துணியமாட்டோம். அவர் நம்மோடு இருக்கிறார், நாம் செய்வதைக் காண்கிறார், எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என்கின்ற எண்ணம் நமக்குள் எப்போதும் இருக்குமானால், நம்முடைய சிந்தனை செயல்கள் எல்லாமே மாறிவிடும். தேவ சிந்தனையாய் மாறிவிடும். அதுபோன்ற பழக்கத்தை நாம் நமக்குள் ஏற்படுத்திக் கொள்வோம். அது நம்மை நன்மைக்கேதுவாக நடத்தும். ஆமென்.

**நான் சர்வ வல்லமையுள்ள தேவன். நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு.**

சகோ. எனிட்
வாலிபன் ஊழியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபையின் வரலாறு

"ஆசியா மேசியாவுக்குச் சொந்தமாக வேண்டும்" என்ற உயரிய எண்ணத்தோடு ஐரோப்பாவிலிருந்து ஆசியா நோக்கிப் பயணித்த மெதடிஸ்த மிஷனரிகளில் இளம் குருவான வண.வில்லியம் ஓல்ட் மட்டக்களப்பை வந்தடைந்த போது இங்கு வரட்சியும், பட்டினிச்சாவும், தொற்றுநோய்களும் மக்களிடையே காணப்பட்டன. இந்நிலையிலும் அவர் தமிழைக் கற்று பறங்கியர், தமிழர், முஸ்லிம்கள் மத்தியில் தமிழில் அருளுரையாற்றி ஆன்மீகத்தில் மக்களை வளர்க்க முயன்றதோடு அக்கால மக்களின் இருளகற்றும் கல்விப் பணியினையும் இம்மண்ணில் ஆரம்பித்தார். இதன் வழியாக, 'மெதடிஸம்' மட்டக்களப்பில் விதைக்கப்பட்டது.


இவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட மட்டு நகர்ப் பணியானது 1820 வரை திருமலையிலிருந்து கண்காணிப்புச் செய்யப்பட்டது. இவ்வருடத்தில் வண.தோமஸ் ஒஸ்போண் அவர்களும் 1815 இல் வண.ஜோசப் றொபர்ட்ஸ் அவர்களும் 1824 இல். வண.ஜெண் ஹண்டர் அவர்களும் 1838 இல் வண.ஜோர்ஜ் ஹோல் அவர்களும் திருப்பணியாளர்களாக நியமிக்கப்பட்டு பணியாற்றினர்.

1838 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 5ம் நாள் கோட்டைமுனையில் ஒரு தமிழ் பாடசாலை நிறுவப்பட்டதாக வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன. அக்காலத்தில் அமிர்தகழியில் துறைமுகம் புழக்கத்திலிருந்ததால், அமிர்தகழியை மையமாக வைத்து கருவேப்பங்கேணி, கூழாவடி, கோட்டைமுனை போன்ற பகுதியில் வாழ்ந்த மக்கள் திருப்பணியாளர்களால் பெரிதும் சந்திக்கப்பட்டு வகுப்புக் குழுக்கள் மூலம் திருப்பணியானது முன்னெடுக்கப்பட்டது.

இவற்றைக் கொண்டு நோக்கும் போது கோட்டைமுனை திருச்சபையின் வரலாறு உண்மையிலேயே 1838 இல் இருந்து உருவாக்கம் என்பது உறுதியாகின்றது. ஆயினும், ஆலயம் என்ற ரீதியில் 1870 இல் பாடசாலையுடனான செப ஆலயம் கட்டப்பட்டது எனவும், ஒரு தென்னந்தோட்டம் அக்காலம் வாழ்ந்த ஒரு சட்டத்தரணியால் அன்பளிப்புச் செய்யப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது. இது எந்த இடத்தில் அமைக்கப்பட்டது என்ற சரியான வரலாற்றுக் குறிப்புக்கள் இல்லை. இதற்கிடையே 1847 இல் புளியந்தீவுக்கு நியமிக்கப்பட்ட வண.றால்ப் ஸ்றொட் திருப்பேரவைக்கு இவ்வருடத்தில் எழுதிய அறிக்கையில் "தாம் ஒவ்வொரு ஞாயிறும் 15 வழிபாடுகள் நடாத்துவதாகவும் அவற்றில் இரு வழிபாடுகள் அமிர்தகழியிலும் ஒரு வழிபாடு கோட்டைமுனையிலும் இன்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1870 இல் கட்டப்பட்டதாக கூறப்படும் பள்ளிக்கூடமும், ஆலயமாகப் பயன்படுத்தப்பட்ட கட்டடமும் இப்படி அமைந்திருக்கலாம். திரு.அமரர் எஸ்.டி.தங்கத்துரை ஐயாவின் நினைவுகளைக் கொண்டு கற்பனையாக வரையப்பட்டது.

வழிபாடு கூழாவடியிலும் நிகழ்த்துவதாக குறிப்பிட்டதிலிருந்து 1870ல் செபாலயம் அமைக்கப்பட்டதற்கு முன்பாகவே 1838ல் அமைக்கப்பட்ட பாடசாலைக் காலத்திலேயே திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது எனலாம்.

இவ்வாறாக வளர்ச்சியடைந்த திருச்சபையானது 1929ல் ஆரம்பிக்கப்பட்டு 1930ல் கோட்டைமுனை ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டது. ஏறத்தாழ இக்காலத்திலேயே திரு.தோமஸ் குமாரசாமி என்பவரிடமிருந்து கோட்டைமுனை ஆலய வளவில் அரைப்பகுதி காணி வாங்கப்பட்டது. 1924 அருள்திரு. ரி.எஸ்.வேதநாயகம் அவர்கள் முகாமைக்குருவாக நியமிக்கப்பட்டதாகவும், கோட்டைமுனை ஆலயமும் குருமனையும் திறக்கப்பட்ட போது அருள்திரு.ஆர்.ஏ. உவின்ஸ்லோ அவர்கள் முகாமைக் குருவாக இருந்ததாகவும் வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

1930ல் திறக்கப்பட்ட புதிய ஆலயம் காலத் தேவைக்கேற்ப அவ்வப்போது மாற்றங்களை அடைந்து வந்தது. முதல் ஆலயத்தின் முன்றலின் ஒரு புகுமுக மண்டபம் கட்டப்பட்டு அதன் முற்பகுதி கிறில் கற்களால் அமைக்கப்பட்டுக் காணப்பட்டது. ஆலயத்தின் முதல் புனரமைப்பு 1950களில் நடைபெற்றது. 1970களில் அருள்திரு.ஜோண் கென்னடி அவர்கள் முன்இருந்த அமைப்பை அகற்றி, மேலே கொங்கிறீட்டு கூரையிட்டு ஆலயத்தின் முன்பாக பிரமாண்டமான சிலுவை உருவம் ஒன்றினை ஏற்படுத்தினார். 1973 சித்திரை மாதம் முதலாம் திகதியிலிருந்து கோட்டைமுனை திருச்சபையானது, மட்டக்களப்பு புளியந்தீவு சேகரத்திலிருந்து, "மட்டக்களப்பு கோட்டைமுனை"




1930 இல் கோட்டைமுனை ஆலய வளவில் கட்டப்பட்ட முதல் ஆலயம் இதுபோன்று அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் புதிய சேகரத்திலுள்ள நான்கு திருச்சபைகளில் ஒரு திருச்சபையாக பரிணாமம் பெற்றது.

1983க்குப் பின்னர் இவ்வாலயத்தில் வழிபடவந்த மக்களின் தொகை அதிக ரிக்க ஆரம்பித்தால் கோட்டைமுனை ஆலயத்தைப் பெரிதுபடுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னர் 1988ல் ஆலய புனர் நிர்மாணக் குழு ஒன்று அமைக்கப் பட்டு ஆலயப் புனர் நிர்மாணப்பணி ஆரம்பிக்கப்பட்டது. இக்காலங்களில் வழிபாடுகள் செல்வநாயகம் மண்டபத் தில் நடைபெற்றன. 1991 இல் இச் சேக ரத்தின் கண்காணிப்புப் பணியை ஏற்ற அருள்திரு.பொன் ஆனந்தராஜா அவர்க ளின் வழிகாட்டலில் இறைவனின் பெரி தான கிருபையினால் 15 இலட்சம் ரூபா செலவில் இன்றைய ஆலயம் உருப்பெற் றது. இப்புதிய ஆலயமே இன்றைய மெத டிஸ்த ஆலயங்களில் விசாலமானதொன் றாகக் காணப்படுகின்றது. இப்பெரிய பணி, தனிமனித முயற்சியல்ல. மாறாக, இறையருளால் திருச்சபை மக்கள் பல ரும் கூடி எழுப்பிய வழிபாட்டுக் கோபுர மாகும். 1993 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 7ம் திகதி புதிய தேவாலயமானது முன்னைநாள் திருப்பேரவைத் தலைவர் காலஞ் சென்ற அருள்திரு. அறிவர். கி.தே.முத் தையா அவர்களாலும் அன்றைய வட கிழக்கு திருமாவட்ட அவைத் தலை வர் அருள்திரு.ஜெ.விவேகநாதன் அவர்களாலும் பிரதிஷ்டை செய்யப் பட்டுக் கோலாகலமாக திறந்து வைக் கப்பட்டது.



1993 இல் திறந்து வைக்கப்பட்ட இன்றைய புதிய ஆலயம்

கோட்டைமுனை திருச்சபையா னது அதன் ஆரம்ப காலந்தொட்டு சமுதாயப் பணியிலும் அதன் வாயி லாக நற்செய்திப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கமைய, சின்ன ஊறணி கிரா மத்தில் மேற்கொள்ளப்பட்ட சமுதா யப் பணியின் வாயிலாக அக்கிராம மக்களுக்கு கிறிஸ்து எனும் நற்செய்தி அறிவிக்கப்பட்டு இன்று இச்சேகரத்தின் ஒரு திருச்சபையாக வளர்ச்சிகண்டு அம்மக்கள் மத்தியில் பணியாற்றுகின் றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வாறாக இன்றும் மக்கள் மத்தியில் சிறுமியர் இல்லம், கணினிப் பயிற்சி நிலையம், பாலர் பாடசாலை போன்ற சமூகப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதுடன் இன்றைய நாட்களில் திராய் மடு, பனிச்சையடிப் பிரதேசத் தைக் கொண்டு திருப்பணி யானது முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக கடந்த நூற் றாண்டுக்கு மேற்பட்ட வருடங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாக உயிர்வாழும் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழிகாட்டுதல் எமது திருச்சபையின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் செவ்வனே இடம்பெற்றிருக்கின்றது. எமது முன்னோர்கள் வாழ்வினால் மாத்திரமல்ல இன்னும் உயிர்வாழும் ஒவ்வொரு திருச்சபை அங்கத்தவர்கள் மத்தியிலும் இவ்வாலயத்தின் பணியானது முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்நாட்களில் இவ்வாலயத்தின் பணியினை முன்னெடுக்க உறுதுணையாய் நின்ற திருப்பணியாளர்கள், உக்கிராணக்காரர்கள், வகுப்பு வழிகாட்டிகள், இறைமக்கள் அனைவரையும் நன்றியோடு நினைவுகூறுகின்றோம். எதிர்காலத்தில் இத்திருச்சபையானது சமுதாயப் பணியிலும் நற்செய்திப் பணியிலும் சிறப்பாகச் செயற்படவும் கிறிஸ்துவை மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற திருச்சபையாகத் திகழவும் நம்முடைய ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து துணை நிற்க வேண்டுமென வேண்டுதல் செய்வோம்.

'வாலிபன்' குடும்பத்தினர்

## நன்றி செலுத்தும் வழிபாட்டு அழைப்பிதழ்

'வாலிபன் ஊழியத்தின்' 5 ஆண்டுகள் நிறைவையொட்டி நடாத்தப்படும் நன்றி செலுத்தும் வழிபாட்டுக்கு அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்** கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்

**காலம்** 09.12.2012 ஞாயிற்றுக்கிழமை

**நேரம்** காலை 7.30 மணி

'வாலிபன்' ஊழியத்தின் அனைத்து வாசகர்களையும் ஆதரவாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-வாலிபன் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதவி செய்வோம்

ஒரு பெரிய நகர் பகுதியில் ராஜு என்ற ஒரு பெரிய பணக்காரர் வாழ்ந்து வந்தார். அவர் அந்த நகரிலே பெரிய ஆடைத் தொழிற்சாலையை நிர்வகித்து வந்தார். இத்தொழிற்சாலை மூலம் அந்த நகரிலே அதிக பணம் சம்பாதிப்பவராக ராஜு திகழ்ந்தார். அதிக பணம் இருந்தாலும் அவர் யாருக்குமே அதைக் கொடுத்து உதவி செய்ய மாட்டார். ஒருநாள் வீதியில் அவர் காலை பயிற்சிக்காக நடந்து செல்லும் வேளையில் ஒரு பிச்சைக்காரர் அவரிடம் வந்து "சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆகிறது எனக்கு உதவி செய்யுங்கள்" என்றார்.

ராஜு அந்தப் பிச்சைக்காரனுக்கு ஒரு உதவியும் செய்யாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டு விரைவாக சென்றுவிட்டார். இவ்வாறே ஒரு நாள் பெற்றோரினால் கைவிடப்பட்ட சிறு பிள்ளைகளைப் பராமரிக்கும் நிலையத்தில் உள்ள பிள்ளைகளுக்கு ஆடை வாங்குவதற்கு உதவி செய்யும்படி அந்த நிலையத்தின் பொறுப்பதிகாரி ராஜுவிடம் வந்து கேட்டார். ராஜு அவர்களிடம் "நான் உழைப்பது எனக்கும் என் குடும்பத்திற்கும் மட்டுமே. இந்த ஏழைப் பிள்ளைகளுக்கு இல்லை" என்றார். இவ் வாறே தன்னிடம் உதவி கேட்டு வருபவர்களுக்கு ஒன்றுமே கொடுப் பதில்லை. ஒருநாள் ஒரு பெரிய தீ விபத்து அவருடைய தொழிற் சாலையில் ஏற்பட்டது. இதனால் அவருக்கு பாரிய இழப்பு ஏற்பட் டது. இதனால் அவருக்கு பணக் குறைவு ஏற்பட்டது. மீண்டும் தொழிற்சாலையை மீள் அமைப்பதற்கு அநேக உதவிகள் தேவைப்பட்டது. யாருமே அவருக்கு உதவி செய்யவில்லை. தனது சகல சொத்துக்களையும் விற்க வேண்டியதாயிற்று. பலரிடம் உதவி கேட்டார். ஆனால் யாருமே செய்ய வில்லை. அந்நிலையில் தான் செய்த தவறை ராஜு உணர ஆரம்பித்தார்.

என் அன்பு தம்பி, தங்கைமாரே! நாம் ராஜு மாதிரி பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தவர்களாய் இல்லாமல் இருக்கலாம். ஆனால் நம்மால் முடிந்தவரை மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இயேசப்பாவும் அதைத்தான் விரும்புகிறார். மத்தேயு 25:32-46 பகுதியில் இயேசப்பா நாம் உதவி செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அழகாகக் குறிப்பிட்டுள்ளார். வாசியுங்கள்.

**"சிறியவராகிய என் சகோதரனான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்"** - மத்தேயு 25:40

இன்றிலிருந்து நாமும் எம்மால் முடிந்த அளவு ஏழை எளியவர்கள், உதவி தேவைப்படுவோர், பெரியவர்கள், அனைவருக்கும் உதவி செய்வோம். கிறிஸ்துவின் பிள்ளைகளாக மாறுவோம்!

**ஜீவந்தி அக்கா**
கோட்டைமுனை



# பாஸ்டர் மோசஸ் ராஜசேகர்

- சுமார் 25 வருடங்களுக்கு முன்னால் வால்பாறையில் இருந்து சென்னையை நோக்கிக் கிளம்பிய புயல், **பாஸ்டர் மோசஸ் ராஜசேகர்** அவர்கள்.

- "அப்பாலே போ சாத்தானே...! அப்பாலே போ சாத்தானே..." என்ற பாடலின் மூலமும், "கிறிஸ்தவன டிஸ்டப் பண்ணாதே....! அவன அசால்டாக எண்ணி விடாதே" என்ற பாடலின் மூலமும் உலகெங்கும் பிரசித்தி பெற்றவர் **பாஸ்டர் மோசஸ் ராஜசேகர்** அவர்கள்.

- இவர் 31.05.1967 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வால்பாறை என்னும் பகுதியில் உள்ள வேர்வேல்லி என்ற மலைப் பிரதேச ஊரில் திரு.மோசஸ், திருமதி.மாரியம்மாள் என்ற தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

- பாஸ்டர் மோசஸ் ராஜசேகர் அவர்கள், 10 ஆம் வகுப்பு படித்து முடித்த சில நாட்களில் சகோதரி பத்மா முதலியார் அவர்களின் வேதாகம கல்லூரியில் சேர்ந்து தன்னுடைய இறையியல் படிப்பை முடித்தார்.

- இறையியல் படிப்பை முடித்த சில வருடங்களுக்குப் பின்பு விருகம்பாக்கத்திலுள்ள ஒரு வீட்டில் தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்தார். பின்பு நெசப்பாக்கம் பகுதியிலுள்ள Holy Cross என்னும் பள்ளியில் ஆராதனை நடத்தி வந்த வேளையில், அதே பகுதியிலுள்ள சூளைப்பள்ளம் என்ற இடத்தில் சொந்தமாக ஒரு இடத்தை வாங்க கர்த்தர் கிருபை செய்தார்.

- அந்த இடத்தில் குடிசை போட்டும், சுவருக்குப் பதிலாக குடிசையை சுற்றிலும் சேலைகளை கட்டியும் ஆராதனை செய்து வந்தார்.

- தான் ஊழியம் செய்து வந்த இடத்தின் ஒரு மூலையில் தன் குடும்பத்தினரோடு வசித்து வந்தார்.

- பசி, பட்டினி, ஊழிய தேவைகள் என்று பல கஷ்டத்தின் மத்தியிலும் கர்த்தருக்காக ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டுமென்று அயராது உழைத்தார்.

- தன்னுடைய 19 ஆம் வயதிலேயே சர்க்கரை நோய் பாதிப்பு இருந்ததினால் அதிக பெலவீனம் மத்தியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தருக்காக உற்சாகமாய் ஊழியம் செய்து வந்தார். அந்த சமயத்தில் தான் கர்த்தர் அவருக்குக் கொடுத்திருந்த பாடல் தாலந்தினைப் பயன்படுத்த ஆரம்பித்தார்.

✳ பல மேடைகளிலும், ஆலயங்களிலும் கர்த்தருடைய பாடல்களைப் பாடி ஆண்டவருடைய நாமத்தை உயர்த்தினார்.

✳ தன்னுடைய "கிருபையே தேவ கிருபையே" என்ற பாடல் ஒலித்தட்டை 1998 ஆம் ஆண்டு சென்னை புரசைவாக்கத்தில் உள்ள அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில் வைத்து அந்த சபையின் மூத்த போதகர் சாம்.சுந்தரம் ஐயா அவர்கள் வெளியிட்டார்கள்.

✳ சூளைப்பாக்கம் என்ற பகுதியில் ஊழியம் நடந்து வந்த இடத்தில் இடம் பற்றாக்குறையால் அதே பகுதியில் வெங்கட்ராமன் சாலை போலீஸ் பூத் அருகில் இருந்த ஒரு காய்கறி கடையை வாடகைக்கு எடுத்து சபையை நடத்தினார்.

✳ குக்கிராமங்களையும், எளிய மனிதர்களையும் வெகுவாய் கவரும் "கதைப்பாடல்" வடிவத்தை இவர் பெரிதும் உபயோகித்தார். இவர் வெளியிட்ட பாடல்கள் (CD Vol 1 to 17, MP3, DVD) கிறிஸ்தவ உலகில் ஒரு எழுப்புதலை உண்டாக்கியது.

✳ சாதாரணமாக எளிய மக்கள் பேசும் கொச்சை தமிழில் எழுதப்பட்ட பல பாடல்கள் அடித்தட்டு மக்களால் மிகவும் விரும்பி கேட்கப்பட்டன. சென்னை புகழ் "கானா" இசையில் இவர் மெட்டமைத்த பாடல்கள் ஒலிக்காத குப்பங்கள் இல்லையென்று சொல்லலாம்.

✳ வாடகை இடத்தில் ஊழியம் செய்து, பின்னர் அதையே சொந்தமாக வாங்க கர்த்தர் கிருபை செய்தார்.

✳ இதற்கிடையில் 2005 ஆம் ஆண்டு இரு சிறுநீரகமும் இழந்ததினால் இரத்த மாற்று அறுவை சிகிச்சை எடுத்து வந்தார். ஆனாலும் கடுகளவும் சோர்ந்துவிடாமல் கர்த்தருடைய ஊழியத்திற்கென்றும், கர்த்தருக்காக ஒரு ஆலயத்தை கட்டி முடிக்க வேண்டுமென்று அயராது உழைத்து வந்தார்.

✳ எட்டு வருடங்களில் சுமார் 2600க்கும் அதிகமான முறை இரத்தமாற்றம் சிகிச்சை செய்துகொண்டார்.

✳ 2008 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு பயங்கரமான போராட்டத்தைச் சந்தித்தார். தன் இரண்டு கண்களையும் இழந்தார். ஆனாலும் போதகர் அவர்கள் சற்றும் சோர்ந்து போகாமல் கர்த்தர் தனக்கென்று கொடுத்த ஊழியத்தை செய்து வந்தார்.

✳ 2011 ஆம் ஆண்டு ஒரு மகிமையான ஆலயத்தை கர்த்தருக்கென்று கட்டிமுடிக்கவும் அதனை சகோதரர் மோகன் சி.லாசரஸ் அவர்களால் திறந்து வைக்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

✳ இப்படி பல சோதனையின் பாதையிலும், கண்ணீரின் பாதையிலும் கர்த்தருக்காக உழைத்த போதகர் அவர்கள் 05.11.2012 ஆம் நாள் இரவு 8.00 மணிக்கு தான் மிகவும் நேசித்த இயேசுவிடம் சேர்ந்தார்.

✳ போதகருக்கு ரூத் ராஜசேகர் என்ற மனைவியும், பிரியா ராஜ்குமார் மற்றும் பிலோமினா நாகல் என்ற மகள்களும், கிங்க்ஸ்லி ராஜசேகர் என்ற மகனும் உள்ளனர்.

✳ இவருடைய குடும்பத்திற்காகவும், இவர் விட்டுச் சென்ற ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நன்றி: Photo Designed & Article edited by:WilsonE.Paul
Special thanks to : Sam Earnest

கடிதத் தொடர்புகளுக்கு :
ஆசிரியர், - "வாலிபன்" சஞ்சிகை,
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை,
மட்டக்களப்பு, இலங்கை.
மின்னஞ்சல் :vaalipan_kyf@yahoo.com

சன அச்சகம் - மட்டக்களப்பு ✆ 065-2222597



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org